பக்கங்கள்:09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 17 சனிக்கிழமை 04.10.2025 கதிர் 328

## இனி அது ரகசியம் அல்ல!

ரணில் விக்கிரமசிங்கவின் கைதோடு எதிர்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து எதிர்ப்புத் தெரிவித்தன. இந்த இணைப்பை அரசியல் ☞2

# புதியதொரு சட்டம் வரும் வரையில் பயங்கரவாத் தடைச் சட்டம் தொடரும்

### அமைச்சர் சந்திரசேகரன் திட்டவட்டம்

புதிய ஒரு சட்டம் அமுலுக்கு வரும் வரையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில்இருக்கும்எனக்கடற்தொழில் அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - சங்கானையில் நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் 'செப்டெம்பர் மாதம் பயங்கரவாத தடைச் சட்டம் நீக்கப்படுமென அமைச்சர் விஜித கேரத் தெரிவித்துள்ளார். ஆனால் தற்போது ஒக்டோபர் மாதம் ஆரம்பித்துள்ளது. அந்தவகையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது தொடர்பாக தங்களது அரசின் நிலைப்பாடு என்ன என கேள்வி எழுப்பினார். பதிலளித்த அமைச்சர் தெரிவித்ததாவது:

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படுமென நாங்கள் எமது கொள்கைப் பிரகடனத்தில் கூறி இருந்தோம். அது நீக்கப்பட வேண்டிய ஒரு சட்டம். அந்தச் சட்டத்தினால் அனைவரையும்விட எமது கட்சிகடுமையாகப்பாதிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தச்சட்டமூலத்தை மாற்றவேண்டும் என்பதில் எம்மிடம் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் நாட்டில் தலை ☞2

# எதிர்க் கட்சிகள் எதற்காக ஒன்றிணையவேண்டும்?

### குட்டையைக் குழப்பும் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஏன் ஒன்றிணையவேண்டும்? அவ்வாறு ஒன்றிணைந்து எதனைச் சாதிக்க போகிறார்கள் என்று முன்னாள் அமைச்சர் திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் அநுரகுமார மற்றும் அவர் தலைமையிலான ஆளும்தரப்புக்கு மக்கள் மத்தியில் நல்லதொரு வரவேற்பு உள்ளது. அரசுத் தலைவர் சீனாவுடன் இணக்கமாகச் செயற்படுவது சிறந்தது. சீனாவின் கம்யூனிச கொள்கைக்கு அமைவாக அடிப்படை நிர்வாகக் கட்டமைப்பில்மாற்றங்களைஏற்படுத்தவேண்டும்.

ஆளும்தரப்பு சிறந்த முறையில் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன நிலையில் எதிர்க்கட்சிகள் பல்வேறுப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஆளும்தரப்புக்கு எதிராக முன்வைப்பதை ☞2

# ரணில் – மகிந்த – நாணய நிதிய பொறிக்குள் மாட்டியது என்.பி.பி.

### விளக்கிச் சொல்கிறார் புபுது ஜெயகொட

**அதிகாரத்துக்கு வரும் எந்த ஆளும்தரப்பும் கடன் தவணைகளை மீள செலுத்த முடியாமல் ஒருசில வருடங்களில் வீழ்ச்சியடையும் வகையில் ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ச, அனைத்துலக நாணய நிதியத்தினர் வைத்துச்சென்ற பொறிக்குள் தற்போதைய ஆளும்தரப்பு சிக்கிக் கொண்டுள்ளதென முன்னிலை சோசலிச கட்சியின் கல்விச் செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.**




**கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:**

**சர்வதேச நாணய** ☞2

# மதுப் பாவனையால் தினமும் 50 பேர் வரை அவலச் சாவு

நாட்டில் பதிவாகும் 83 சதவீதமான இறப்புகள் தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன. மதுபாவனையால் தினமும் சுமார் 50 பேர் அகாலமாக இறக்கின்றனர். மேலும் ஒவ்வொரு ஆண்டும் 20 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்று மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

சர்வதேச மதுசார தடுப்பு தினத்தை முன்னிட்டு (ஒக்டோபர் 3) மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தினால் ☞6

# தன்பாலின ஈர்ப்பாளர்களை கவரும் எந்தவொரு திட்டமும் கிடையாது

### அயலுறவுத்துறை அமைச்சர் தெளிவுபடுத்தல்

தன்பாலீர்ப்பின சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு வரவழைப்பதை மேம்படுத்த ஆளும்தரப்பால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது. அது ஆளும்தரப்பின் கொள்கையும் அல்ல என அயலுறவு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

சர்வதேச சுற்றுலா தலைமைத்துவ மாநாடு வியாழக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அரசுத் தலைவர் அநுரகுமார தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றிய போதே அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது பொருளாதார இலக்கை அடைவதற்கு சுற்றுலாத்துறையின் ஊடாகப் பெரும் ஒத்துழைப்பு கிடைக்கின்றது. இவ்வாண்டு இதுவரையான காலப்பகுதியில் சுற்றுலாத்துறை வருமானம் 2.2 பில்லியனைக் கடந்துள்ளது.

அதேவேளை சுற்றுலாப் பயணிகளின் வருகையும் பெருமளவில் அதிகரித்துள்ளது. ☞2

# மதிப்பீட்டுப் பரீட்சையாக எண்ணி மாகாண தேர்தலை உடன் நடத்துக

### ஐக்கிய மக்கள் சக்தி ஆளும்தரப்பிடம் வலியுறுத்து

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாணசபை அறிமுகப் படுத்தப்பட்டு தேர்தல் நடத்தப்பட்ட போது வேட்பாளர்கள், வாக்காளர்களென சுமார் 6000 பேர் ஜே.வி.பியால் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி. இன்னும அதே நிலைப்பாட்டில்தான் இருக்கின்றதா? அவ்வாறில்லை என்றால் ஒரு மதிப்பீட்டுப் பரீட்சையாக மாகாணசபைத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு ஆளும்தரப்பை வலியுறுத்துவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆட்சிக்கு வர முன்னர் ஆட்சியமைத்து ஓராண்டுக்குள் மாகாணசபைத் தேர்தல் ☞6

# மாகாண தேர்தல் சட்டச் சிக்கலுக்கு விரைவில் தீர்வை முன்வையுங்கள்

### ஆளும்தரப்பிடம் தேர்தல் ஆணையர் வலியுறுத்து

மாகாண சபைகள் தேர்தல் குறித்து அரசியல் கட்சிகள் விசேட அவதானம் செலுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது. மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் உள்ள அடிப்படை சட்டச் சிக்கல் குறித்து ஆளும்தரப்பு விசேட கவனம் செலுத்தி, அதற்கான தீர்வை வெகுவிரைவில் முன்வைக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ரத்நாயக்க தெரிவித்தார்.

அவரிடம் மாகாண சபைத் தேர்தல் குறித்து வினவிய போதே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

காலவரையறையின்றி பிற்போடப் பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை வெகுவிரைவாக நடத்தவேண் டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். மாகாண சபைத் தேர்தலை பழைய தேர்தல் முறையில் நடத்துவதா அல்லது புதிய தேர்தல் முறையில் நடத்துவதா என்பதில் சட்டச் சிக்கல் காணப்படுகிறது.

மாகாண சபைத் தேர்தலில் காணப்படும் சட்ட சிக்கலுக்கு நாடாளுமன்றத்தின் ஊடாகவே தீர்வுகாண முடியும் என்று உயர் நீதிமன்றம் பலமுறை வியாக்கியானமளித்துள்ளது. ஆகவே இந்தச் சட்ட சிக்கலுக்கு தீர்வு ☞2


### புத்தளம் மாவட்டத்தில்

# யானை – மனித மோதலைத் தடுக்க காட்டு குளங்களை சீரமைக்க முடிவு

(சியாஜ்)

புத்தளத்தில் யானைகள் மற்றும் மனிதர்கள் இடையிலான மோதலைத் தடுக்கும் வகையில் காட்டுக்குள் உள்ள 15 குளங்கள் சீரமைப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாக புத்தளம் பிராந்திய வனத்துறைப் பணிப்பாளர் கமால் தென்னக்கோன் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்தில் யானைகள் மற்றும் மனித மோதலை தடுப்பது தொடர்பாக நேற்று நடந்த கூட்டத்தைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம்



பேசியபோது இதனைத் தெரிவித்தார். புத்தளம் ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

கூட்டாக்கிஅதன்மூலம்இலாபம்சம்பாதிக்கலாம் என்றுசிலர் கங்கணாங்கட்டிச்செயற்பட்டாலும், இந்தக் கூட்டுக்கு யார் தலைவர் என்கிற போட்டியிலும் தலைமையை தனது பிடிக்குள் கொண்டுவருவதற்கானரணிலின்வழக்கமான குள்ளநரித் தனங்களாலும் அது தொடர்பான பேச்சுக்கள் முன்னகராமல் முடங்கிவிட்டன.

எதிர்க் கட்சிகளின் கூட்டுக்குத் தன்னைத் தலைவனாக்க முயற்சித்து ரணில் எடுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய மாநாட்டு முயற்சியும் சஜித் பிரேமதாசவும் நாமல் ராஜபக்சவும் செல்லாததால் பிசுபிசுத்துப் போனது. இதனை அடுத்து எதிர்க் கட்சிகளின் அரசியல் கூட்டு என்பது கானல் நீராகிவிட்ட நிலையில், அதற்கு மீண்டும் சுவாசம் கொடுக்கும் முயற்சியாக கொழும்பிலுள்ள தனியார் விடுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரின் ஏற்பாட்டில் மீண்டும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.



வியாழக்கிழமை இரவு ஐ.தே.க. தவிசாளரான வஜிர அபேவர்த்தன ஏற்பாடு செய்திருந்தார். இந்தக் கலந்துரையாடலின் முக்கிய விருந்தினர்கள் இருவர். முதன்மையானவர் ரணில் விக்கிரமசிங்க, மற்றையவர் நாமல் ராஜபக்ச. ஐ.தே.க. தேசிய மாநாட்டுக்குத் தான் வருகை தராது தனது கட்சியின் செயலாளரை மட்டும் அனுப்பி வைத்த நாமல் நேற்றைய கூட்டத்திற்கு வந்திருந்தார். ராஜபக்ச குடும்பத்தைச் சுற்றி இலஞ்ச, ஊழல் விசாரணைகளும் கொலைக்குற்றவிசாரணைகளும்இறுகிவரும் நிலையில் எதிர்காலத்தில் அவருக்கும் எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைந்த ஆதரவு தேவைப்படும்என்பதால்அவரால்கூட்டத்தைப் புறக்கணிக்க முடியாமல் போயிருக்கக்கூடும்.

இரவுணவோடு நடந்த இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்த மற்றொரு முக்கிய தலை, முன்னாள் அமைச்சரான ஜி.எல்.பீரிஸ். கூட்டத்தில் 25க்கும் மேற்பட்டவர்கள் அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கலந்துகொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது, இலங்கைபொதுஜனபெரமுனவின்(றீஸிஊண–ஊண) தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச மற்றும் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்த தங்கள் நிலைப்பாடுகளை எடுத்துரைத்தனர்.

ஒருங்கிணைந்த எதிர்க்கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் கொழும்பில் ஒரு பொதுக் கூட்டத்தை ஏற்பாடு செய்வது மற்றும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியாக முன்னேறும்போது கட்சிகள் எடுக்கவேண்டிய முக்கிய கூட்டு நடவடிக்கைகள் ஆகியவை அங்கு விவாதிக்கப்பட்ட தலைப்புகளில் அடங்கியிருந்தன.

கூட்டத்தில்'ஹைலைட்'டேஎன்னவென்றால் அங்குமுன்வைக்கப்பட்டகிட்டத்தட்டஅனைத்து முன்மொழிவுகளுக்கும் முன்னாள் அரசுத் தலைவர்ரணில்விஜேசிங்கஒப்புக்கொண்டார் என்பதுதான். பொதுவாக ரணில் அப்படிச் செய்பவரல்லர். எல்லாவற்றுக்கும் அவரிடம் ஒரு நிபுணத்துவக் கருத்து இருக்கும். அது மற்றவர்களின் கருத்துக்களில் இருந்து மாறுபட்டிருக்கும். அதனால் தனது பாண்டித்தியத்தை வெளிப்படுத்து வகையில் அவர் எப்போதும் எதிர்க் கருத்துக்களைத் தெரிவிப்பதில் வல்லவர். ஆனால், நேற்று அவர் தனது வல்லுநர் தனத்தைச் சுருட்டி வைத்திருந்தார். கைதால் அவர் கடுமையாக ஆடிப் போயிருக்கிறார் போலுள்ளது. அதுதான் இந்த மாற்றம்.

ஆனால், வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியை உடைப்பதில் அசகாயசூரரான ரணில் எப்போது என்ன செய்வார் என்பதை ஊகிக்க முடியாது.

தெற்கில் நடந்த இந்தச் சந்திப்புப் பற்றிய தகவலுடன் கொசுறாக வடக்கில் நடந்த மற்றொரு சந்திப்புக் குறித்தும் உங்களுடன் பகிர்ந்துகொள்கின்றேன். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் நேற்று செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனைச் சந்தித்து அரசியல் தொடர்பில் கலந்துரையாடினார். வடக்கில் இதுவரையில் சைத் தமிழ் மக்களின் ஆன்மிகத் தலைவராக நல்லை ஆதீனக் குரு இருந்து வந்தார். அவரது மறைவிற்குப் பின்னர் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு இதுவரையில் யாரும் வரவில்லை. இப்போதைக்கு அந்த இடத்தை நோக்கி, அதாவது சைவத் தமிழ் மக்களின் ஆன்மீகத் தலைவர் என்ற இடத்தை நோக்கி முன்னேறி வரக்கூடிய ஆன்மீகவாதி என்று ஆறுதிருமுருகனைச் சொல்லலாம். அதனாலோ என்னவோ அவரிடம் சென்று ஒற்றையாட்சி அரசமைப்பு தொடர்பில் விளக்கமளித்துள்ளார் கஜேந்திரகுமார்.

யார் மண்டையையாவது, எப்படியாவது கழுவி தமிழ் அரசுக் கட்சிக்கு நெருக்கடி கொடுத்து மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாக அதனைத் தமது கூட்டணிக்குள் கொண்டுவருவதற்கு அவரும் தலையால் எப்படியெப்படியோ மண்ணைக் கிண்டிப் பார்க்கிறார். அதனடிப்படையில்தான் ஆறு திருமுருகனைச் சந்தித்து ஆளும் என்பிபி கொண்டுவரப்போவதாக அவரே திரும்பத் திரும்பக் கூறிவருகின்ற 'ஏக்கிய ராஜ்ஜிய' அரசமைப்பினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து ஆறு. திருமுருகனுக்கு விளக்கமளித்துள்ளார்.

தெல்லிப்பளை துர்க்கையம்மன் வளாகத்தில் நடைபெற்றது. இச்சந்திப்பில் முன்னணியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினருமானகஜேந்திரனும் கலந்துகொண்டார். .

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதியத்தினால் உலகில் ஆகக்குறைவான கடன் குறைப்பு செய்த நாடு இலங்கை என ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவை தெரிவித்திருக்கிறது. இலங்கைக்கு இது தொடர்பில் ஆலோசனை வழங்கிய ஆளும்தரப்பும் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையை சர்வதேச நாணய நிதியம் சொல்வதால் அதனை செய்ய வேண்டி இருப்பதாக தெரிவித்திருந்தது. ஆனால் இந்த நடவடிக்கையில் தலையிட்டிருந்த நாணய நிதியம் தற்போது, இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் மிகவும் மோசமான முறையில் விமர்சித்திருக்கிறது.

அதாவது 2028 ஆகும்போது நாங்கள் பெரும் பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும் எனவும் எச்சரித்திருக்கிறது. நாங்கள் 2028இல் பெரும்தொகைக் கடனைச் செலுத்தவேண்டி ஏற்படுகிறது. அதேநேரம் கடன் மறுசீரமைப்பு குறைகிறது. 2028இல் எங்களுக்கு கடன் மீள செலுத்த முடியாமல் போனால், எங்களுக்கு எந்தவித நிவாரணமும் கிடைக்கப்போவதில்லை. கடன் குறைப்பும் வட்டியும் கணக்கிடப்படுவது, 2025, 2026 மற்றும் 2027 ஆகிய மூன்று வருட சராசரிக்கு அமைவாகும் எனவும் நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

ரணில் விக்ரமசிங்க (டைம் பாம்) நேரம் பார்த்து வெடிக்கும் குண்டுகளை புதைத்து விட்டுச்சென்றுள்ளதாக நாங்கள் தொடக்கத்திலேயே தெரிவித்திருந்தோம். சில குண்டுகள் 2025 இறுப்பகுதியில் வெடிக்கும் வகையிலும் இன்னும் சில குண்டுகள் 2028இல் வெடிக்கும் வகையிலும் புதைத்துள்ளார். இந்த 'டைம் பாம்'களை எடுத்துக்கொண்டு விழுங்க வேண்டாம் என இந்தஅரசுத்தலைவருக்கும்ஆளும்தரப்புக்கும் நாங்கள் தெரிவித்திருந்தோம்.

அதுமாத்திரமல்ல, நாடு கடன் செலுத்த முடியாமல் நெருக்கடிக்குள்ளாகினாலும், வாக்குறுதியளித்தகடன்உரிமையாளர்களுக்கு கட்டாயமாக கடன் தவணைகளை செலுத்த வேண்டும் எனவும் நாணய நிதியம் தெரிவித்துள்ளது. அதனால் கடன் செலுத்துவதற்கும் வட்டி செலுத்துவதற்கும் எங்களுக்கு கடன் பெறவேண்டி ஏற்படுகிறது. அதற்காக மக்களின் சொத்துக்கள் வளங்களை விற்பனை செய்தாவது பணம் தேட வேண்டிவரும்.

அதனால் அதிகாரத்துக்கு வரும் எந்த ஆளும்தரப்பும் ஒருசில வருடங்களில் வீழ்ச்சியடையும் வகையில், சர்வதேச நாணய நிதியம், ரணில் விக்ரமசிங்க, ராஜபக்சவினர் இணைந்து பொறி ஒன்றை வைத்திருந்தனர். அந்த பொறிக்குள் இந்த ஆளும்தரப்பு அழகான முறையில் தற்போது மாட்டிக்கொண்டுள்ளது – என்றார்.

## புதியதொரு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரித்து ஆடுகின்ற இந்தப் போதை குறித்தும், போதைப்பொருள் வியாபாரிகள் குறித்தும் மக்களுக்கு நன்றாக தெரியும். அந்தப் போதைப்பொருளுக்கு பின்னால் இன்னொரு போதைப்பொருள் உலகம், பாதாள உலகம், பாதாள அரசியல் மறைந்திருக்கிறது.

இவ்வாறான அரசியலை ஒடுக்குவதற்கு சட்டங்கள் தேவை. அதனால் புதிய சட்டம் வரும் வரைக்கும் தற்போதைய சட்டத்தினை பயன்படுத்தவுள்ளோம். அதேநேரம் ஒரு விடயத்தை நாங்கள் மீண்டும் சொல்லுகின்றோம், இந்தப் பயங்கரவாத தடுப்பு சட்டத்தை பயன்படுத்தி எந்த ஒரு அப்பாவி குடிமகன் மீதும் நாங்கள் கை வைக்கப்போவதில்லை.

நாட்டு மக்களது சொத்துக்களை சூறையாடியவர்களுக்கு எதிராகவே இந்த சட்டம் பாய்கின்றதே தவிர வேறு எதற்கும் பயன்படுத்தப்படாது. சுமந்திரனே, கடந்த காலத்தில் ரணிலுக்கு பின்னால் ஓடினார். அவர்களுக்காக வழக்காடினார். ஆனால் அந்த காலத்தில் இந்த சட்டத்தை நீக்குவதற்கு எந்தவித முயற்சியும் எடுக்கவில்லை.

நாங்கள் வந்து ஒரு வருடத்தில் நாட்டினை கட்டியெழுப்பதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம் – என்றார்.

## எதிர்க் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவதானிக்க முடிகிறது. குறுகிய அரசியல் கொள்கையுடன் அனைத்து விடயங்களையும் விமர்சிக்க முடியாது.

எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஏன் ஒன்றிணையவேண்டும்? அவ்வாறு ஒன்றிணைந்துஎதனைச்சாதிக்கபோகிறார்கள் என்பது தெரியவில்லை. அவ்வாறு ஒன்றிணைந்தவுடன் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் என்னவென்பது குறித்து எவ்வித திட்டமும் கிடையாது. ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி உட்பட எதிர்க்கட்சிகள் பலவீனமடைந்துள்ளன. தேசிய மக்கள் சக்தி பலமடைந்துள்ளது. இதுவே உண்மை.

போதைப்பொருள் பிரச்சினை நாட்டுக்கு சாபமாகவே காணப்படுகிறது. கடந்த காலங்களில் போதைப்பொருள் வர்த்தகர்கள். அரசியல்வாதிகளுக்கு உதவி செய்தார்கள், அரசியல்வாதிகள் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கு உதவி செய்தார்கள். போதைப்பொருளுக்கு எதிராக ஆளும்தரப்பு எடுக்கும் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கது.

போதைப்பொருள் வர்த்தகர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தரப்பினரைக் கைதுசெய்து அவர்களுக்கு எதிராக வழக்குகளை விரைவாக நிறைவு செய்து, கடுமையான தண்டனை வழங்கவேண்டும். சமூகக் கட்டமைப்பில் இருந்து அவர்களை ஒதுக்கி வைக்க வேண்டும் என்றார்.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காண்பதற்குச் சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்துசெயற்படவேண்டும்என்பதை தொடர்ந்து குறிப்பிட்டு வருகிறோம்.

மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்துவதற்கான சூழலை ஆளும்தரப்பு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். சட்ட சிக்கலுக்கு தீர்வு கண்டால் தேர்தலை விரைவாக நடத்தலாம் என்றார்.

## தன்பாலின ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரலாற்றில் முதன் முறையாக செப்டெம்பரில் அதிகூடிய சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகியுள்ளது. 158,971 சுற்றுலாப் பயணிகள் செப்டெம்பரில் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இவ்வாண்டில் 17 இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்திருக்கின்றனர். எமது இலக்கை நோக்கி இந்தப் பயணத்தை தொடர்வோம்.

இலங்கையின் சுற்றுலாத்துறையின் தரத்தை மேலும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்திருக்கின்றோம். இந்தியா, பிரத்தானியா, சீனா, ரஷ்யா, ஜேர்மன், பிரான்ஸ், ஆஸ்திரேலியா மற்றும் மேலும் பல ஐரோப்பிய நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருகின்றனர்.

சுற்றுலாத்துறை மிக விரைவாக வளர்ச்சியடைந்து வருகிறது. அதற்கமைய எமது வருமானமும் அதிகரித்துச் செல்கிறது. இவ்வாறான சூழலில் எமது பண்பாடு பாதுகாக்கப்படும் வகையில் சுற்றுலாத்துறை அபிவிருத்திகள் இடம்பெறவேண்டும். எமது தரத்தை தாழ்த்திக் கொண்டு, நாட்டின் கலாசாரத்தைசீரழித்துசுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தேவை ஆளும்தரப்புக்கு இல்லை.

எந்தவகையிலும்தன்பாலீர்ப்பினசுற்றுலாப் பயணிகளை நாட்டுக்கு வரவழைப்பதை மேம்படுத்த ஆளும்தரப்பால் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது. அது எமது கொள்கையும் அல்ல.

ஆளும்தரப்பிடம் அவ்வாறானதொரு கொள்கை இல்லை. இவ்வாறு விசாலமான எண்ணிக்கையிலான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வரும் நிலையில், இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான எந்தவொரு தேவையும் ஆளும்தரப்புக்கு கிடையாது.

தன்பாலீர்ப்பினத்தவர்களை அடிப்படையாகக்கொண்டசுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான கொள்கையில் ஆளும்தரப்பு இல்லை என்பதை தெளிவாகக் கூறிக் கொள்கின்றோம். சுற்றுலாத்துறையின் மதிப்பு மிக்க தரத்தைப் பாதுகாத்துக் கொண்டு முன்னோக்கிச் செல்வோம் என்றார்.

## யானை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட செயலாளர் சில்வா தலைமையில் கூட்டம் இடம்பெற்றது.

அங்கு பேசிய சுற்றாடல் பிரதி அமைச்சர் அன்டன் ஜெயக்கொடி, காட்டு யானைகள் மற்றும் மனித மோதல்களில் இதுவரை சுமார் 300 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளதுடன், 150 இற்கும் அதிகமான மனித உயிர்கள் காவு கொல்லப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

காட்டு யானைகளுக்குத் தேவையான நீர் மற்றும் உணவுப் பற்றாக்குறையின் காரணமாகவே அவை கிராமங்களுக்குள் ஊடுருவுவதாகவும், அதனைத் தடுப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வருடத்திற்கு சுமார் 8 மாதங்கள்வரை காட்டுயானைகளின் அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்த சுற்றாடல் பிரதி அமைச்சர், யானை மனித மோதல்களினால் ஏற்படும் உயிரிழப்புக்களைத் தடுப்பதே நேற்றைய கூட்டத்தின் முதன்மை நோக்கம் எனவும் குறிப்பிட்டார்.

காட்டு யானைகள் கிராமப்புறங்களுக்குள் நுழைவதைத்தடுக்க, காட்டுப்பகுதிக்குள் சுமார் 15 குளங்கள் புனரமைக்கப்பட இருப்பதாக புத்தளம் பிராந்திய வனத்துறை பணிப்பாளர் கமால் தென்னகோன் தெரிவித்தார்.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சுமார் 10 ஆயிரம் தென்னங்கன்றுகள் காட்டு யானைகளினால் சேதமக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வாறான தாக்கங்களை கட்டுப்படுத்த புத்தளம் மாவட்டத்தில் இதுவரை சுமார் 370 கி.மீ தூரத்திற்கு மின்சார வேலிகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மதிப்பீட்டுப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படும் என தேசிய மக்கள் சக்தி வாக்குறுதியளித்தது. செப்டெம்பர் 21 அன்று அந்த ஓராண்டு நிறைவடைந்துள்ளது. ஆனால் இதுவரை மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் ஆளும்தரப்பிடமிருந்து எந்தப் பதிலும் இல்லை.

என்ன காரணத்துக்காக மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமலுள்ளது? அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் ஊடாக மாகாண சபைத் தேர்தல் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர், அந்த தேர்தலில் வாக்களிக்கச் சென்ற மக்கள் 1987 மற்றும் 1988களில் ஜே.வி.பி.யினரால் கொல்லப்பட்டனர்.

வாக்காளர்கள் மாத்திரமின்றி வேட்பாளர்

தொடர்ச்சி 6ம் பக்கம்....

# கெஹெல்பத்தர பத்மேவிடமிருந்து மற்றொரு சிறிய துப்பாக்கி மீட்பு

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களில்ஈடுபடுபவரும் பாதாளஉலககுழுதலைவருமான மனுதினபத்மசிறி பெரேரா என்னும் கெஹெல்பத்தர பத்மேவிடமிருந்த மற்றொரு சிறிய ரக துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாக குற்றப்புலனாய்வுதிணைக்களம் தெரிவித்துள்ளது.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது சிறிய ரக துப்பாக்கியை அவர் வைத்திருந்தமை குறித்து தகவல்களை வெளிப்படுத்தினார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் 3 ஆம் இலக்க வணிக குற்றப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மனுதினபத்மசிறி பெரோஎன்னும்கெஹெல்பத்தர பத்மேவிடம் தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகின்றது.

அதற்கமைய சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த அதிகாரிகள் அம்பலங்கொடை ஊரகஸ்மங் சந்தி கொஸ்கொட பகுதியில் வைத்து ஒரு சிறிய ரக துப்பாக்கி மற்றும் மெகசின் ஒன்றையும் மீட்டுள்ளனர். கொஸ்கொட வீதியிலிருந்து மாற்று வீதிக்கு திரும்பும் பகுதியிலிருந்த நீர் வழிந்தோடும் வடிகாலினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவை கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்படி துப்பாக்கி பல குற்றச் செயல்களுக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் கெஹெல்பத்தர பத்மே தகவல் அளித்துள்ளார்.

இதேவேளை ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களும் பாதாள உலகக்குழு தலைவர்களுமான கெஹெல்பத்தர பத்மே உள்ளிட்ட ஐவர் 2025 ஒகஸ்ட் 30 இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்டு நாடு கடத்தப்பட்டனர்.

# பிளாஸ்டிக் போத்தல்களுக்கு புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு

இலங்கையில்மீண்டும்பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் போத்தல்கள் மற்றும் பாலிமர் (ஸ்ரீலியிதீதுஎஷ-ணுழிவிள-) அடிப்படையிலான குழந்தைகளுக்கு பாலூட்டும் போத்தல்கள் அனைத்தும் 2026 ஏப்ரல் 1 முதல் இலங்கை தர நிர்ணயச் சான்றிதழை கட்டாயம் கொண்டிருக்கவேண்டும் என்று நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை அறிவித்துள்ளது.

செப்டெம்பர் முதலாம் நாள் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியின்படி, உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் வர்த்தகர்கள், தேவையான எஸ்.எல்.எஸ். தரநிலைகளை பூர்த்திசெய்து, சான்றிதழ் அடையாளத்தைக் காண்பிக்காத பட்சத்தில், அத்தகைய போத்தல்களை உற்பத்திசெய்தல், இறக்குமதி செய்தல், கொண்டு செல்லுதல், சேமித்து வைத்தல் அல்லது விற்பனை செய்தல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீண்டும் பயன்படுத்தக்கூடிய, குடிதண்ணீர் அல்லது திரவங்களை எடுத்துச் செல்லும் பிளாஸ்டிக் போத்தல்கள் இலங்கை தர நிர்ணய விவரக்குறிப்பு நீஸிநீ 1616 மற்றும் பாலிமர் பொருட்களால் செய்யப்பட்ட பாலூட்டும் போத்தல்களுக்கான இலங்கை தர நிர்ணய விவரக்குறிப்பு நீஸிநீ 1306 என்பவற்றைக் கொண்டிருக்கவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு, இந்த பணிப்பு இலங்கை தர நிர்ணய நிறுவனத்தின் (நீஸிநீணு) இறக்குமதி ஆய்வுத் திட்டத்தின் கீழ் முன் கூட்டிய ஆய்வையும் அங்கீகாரத்தையும் கோருகிறது. நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம் இல. 9/2003 மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை நுகர்வோர் பாதுகாப்பை வலுப்படுத்தவும், தரமற்ற பிளாஸ்டிக் பொருட்கள் சந்தைக்குள் நுழைவதைத் தடுக்கவும், சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட தரநிலைகளுக்கு இணங்குவதை உறுதிப்படுத்தவும் இலக்காகக் கொண்டுள்ளது நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

# சிறுவர் தண்டனைக்கெதிரான சட்டமூலம் நிறைவேற்றப்படுவது நேற்று ஒத்திவைப்பு

**திருத்தங்களை இனியும் முன்வைக்கலாம் என்கிறார் நீதி அமைச்சர்**

சிறுவர்கள் உடல்ரீதியாக தண்டிக்கப்படுவதுதொடர்பில்(19ஆவதுஅத்தியாயமான) தண்டனைச் சட்டக்கோவையை திருத்துவதற்கான சட்டமூலம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றபோதும் அது நாடாளுமன்றத்தினால் சட்டமாக அனுமதிக்கப்படவில்லை. அதனால் இது தொடர்பில் திருத்தங்களை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் நாடாளுமன்ற குழுநிலையின்போது சமர்ப்பிக்க முடியுமென நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தண்டனைச்சட்ட கோவை திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் செப்டெம்பர் 24 நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. என்றாலும் குறித்த சட்டமூலம் தொடர்பில் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றதே தவிர, அது சட்டமாக அனுமதித்துக்கொள்ளாமல் ஒத்திவைக்கப்பட்டது. குறித்தசட்டமூலத்தின் திருத்தங்கள் செயல்வலு பெறுவதாக இருந்தால், இதற்கு சமமாக குற்றவியல் வழக்கு ஏற்பாடுகள் சட்டக் கோவையிலும் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதால் குறித்த சட்டமூலம் அனுமதிக்கப்படவில்லை.

இந்தச் சட்டமூலம் இதுவரை சட்டமாக அனுமதிக்கப்படவில்லை என்பதால், இதில் திருத்தங்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்றால், குறித்த திருத்தங்களை நாடாளுமன்ற குழுநிலையின்போது சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் இருக்கிறது. சிறுவர்களை உடல்ரீதியாக தண்டிப்பது தொடர்பில் தண்டனைச்சட்ட கோவையில் திருத்தம் மேற்கொள்வதான சட்டமூலம் இதுவரை சட்டமாக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம் என்றார்.

# உள்நாட்டு வானூர்தி சேவையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

உள்நாட்டு வானூர்தி சேவையை அபிவிருத்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். நாட்டில் அரசியல்மற்றும் பொருளாதாரம் தற்போது ஸ்திரமடைந்துள்ளது. ஆகவே உள்ளக வானூர்தி சேவைக்குதனியார்துறையினர் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டுமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, துறைமுகம் மற்றும் சிவில் வானூர்தி சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.


கொழும்பு பேர வாவியை பயன்படுத்தி நீர் வானூர்தி கட்டுநாயக்காவிற்கு இடையில் சேவையை ஆரம்பிக்கும் திட்டம் நேற்று கொழும்பு சினமன் லேக் ஹோட்டல் முனையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் இருந்து நேற்று வருகைத் தந்த சிறிய ரக நீர் வானூர்தியை அமைச்சர் பிமல் ரத்நாயக்க, பாதுகாப்பு செயலாளர்சம்பத்துய்யகொந்த, ஜோன்ஸ் கீல்ஸ் குழுமம் மற்றும் சினமன் ஹோட்டல்குழுமத்தின் தலைவர் கிருஷான் பாலேந்திர ஆகியோர் வரவேற்றனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கொழும்பு துறைமுக நகரத்தை அண்மித்த வகையில் உள்ளக வானூர்தி சேவையை ஆரம்பிப்பதில் பாதுகாப்பு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு பல பிரச்சினைகள் கடந்த காலங்களில் காணப்பட்டன.

சுமார் 12 ஆண்டுகால முயற்சியின் பயனாக பாதுகாப்பு அமைச்சின் முழுமையான கண்காணிப்புடன் இந்த உள்ளக வானூர்தி சேவை தொடங்கப்பட்டுள்ளது. உள்ளக வானூர்தி சேவையை அபிவிருத்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதாரம் தற்போது உறுதியடைந்துள்ளது. ஆகவே உள்ளக வானூர்தி சேவைக்கு தனியார் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜோன்ஸ் கீல்ஸ் குழுமம் மற்றும் சினமன் ஹோட்டல் குழுமத்தின் தலைவர் கிருஷான் பாலேந்திர, கொழும்பு பேரவாவியை அண்மித்து உள்ளக வானூர்தி சேவையை தொடக்கியுள்ளமை சிறந்ததாகும். இந்தச் சேவைஊடாகஅணைவரும் பயனடைவார்கள். குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு இந்த சேவை மிகவும் இலகுவானதாக அமையும். சினமன் எயார் வானூர்தி பிரதானமாககொழும்புக்கு வெளியில்கட்டுநாயக்கவானூர்தி நிலையத்தில்இருந்து பயணத்தை மேற்கொள்கிறது.



இருப்பினும் தற்போது கொழும்பு பேரா வாவியை அண்மித்து வானூர்தி சேவையை ஆரம்பித்துள்ளமை சிறந்ததாகும். இந்த சேவை ஊடாக அனைவரும் பயனடைவார்கள். குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு இந்த சேவை மிகவும் இலகுவானதாக அமையும்.

கொழும்பு நகரில் பிரதான சுற்றுலா ஹோட்டல்கள் அமையப்பெற்றுள்ளது. இந்தப் புதிய திட்டத்தின் ஊடாக சுற்றுலாத்துறை மேம்படும். உள்ளக வானூர்தி சேவைக்கும் புதிய அனுபவமாக அமையும். ஆகவே இந்த புதிய சேவையானால் நாட்டின் சுற்றுலாத்துறைக்கைத்தொழில் அபிவிருத்தியடையும் என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த பாதுகாப்பு செயலாளர் எயார் வைஸ் மார்ஷல் (ஓய்வுநிலை) சம்பத்துய்யகொந்த இந்த திட்டத்துக்குரிய பாதுகாப்பு வசதிகள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்து இந்த உள்ளக வானூர்தி சேவையை தொடங்குவதற்கு அனுமதியளித்துள்ளோம்.

இந்தத் திட்டத்தை மேலும் விரிவுப்படுத்துவதற்கு பாதுகாப்பு சட்டங்களுக்கமைய அனுமதி வழங்குவோம் என்றார்.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# மது – சட்டபூர்வ சாவுப் பொறி

இலங்கையில்போதைப்பொருளைகட்டுப்படுத்தும்நோக்கில்ஆளும்தரப்பு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஹெரோயின், கஞ்சா, ஐஸ் (Crystal Methamphetamine) போன்ற போதைப்பொருட்கள் சமூகம், பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு அமைப்புகளுக்கு ஆபத்து என்று வலியுறுத்தப்படுகிறது. ஆனால் அதே ஆளும்தரப்பு, தினமும் சுமார் 50 பேரை உயிரிழக்கச் செய்யும் மதுவை சட்டபூர்வமாக வைத்துக்கொண்டு, அதன்மூலம் கலால் வரிகளால் பெரும் வருமானம் ஈட்டுவது மிகப்பெரிய முரண்பாடாகத் தோன்றுகிறது.

### ஆண்டுக்கு 20,000 சாவுகள்

மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் வெளியிட்ட தரவுகள் அச்சத்தை ஏற்படுத்துகின்றன. இலங்கையில் ஒவ்வொரு நாளும் 50 பேர் மதுபாவனையால் அவலச் சாவடைகின்றனர். வருடாந்தம் இந்த எண்ணிக்கை 20,000 உயிர்களுக்கு மேல் சென்றடைகிறது. இது நாட்டின் போக்குவரத்து விபத்துகள், போதைப்பொருள் தொடர்பான உயிரிழப்புகள், இயற்கை பேரிடர்கள் என்பவற்றால் ஏற்படும் உயிரிழப்புக்கள் அனைத்தையும்விட அதிகமானது.

மதுவால் நேரடியாக ஏற்படும் நோய்களில் இருதய நோய், கல்லீரல் கோளாறுகள், புற்றுநோய் முதன்மையாகின்றன. மதுவைப் பயன்படுத்துவோரின் குடும்பங்கள் பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைவதும், குழந்தைகள் கல்வி மற்றும் உணவுக்கே சவால்களை எதிர்கொள்வதும், சமூகத்தில் பரவலான பாதிப்புகளைக் காட்டுகிறது.

### சாவுக்குள் தள்ளப்படும் மக்கள்

இந்நிலையில்ஆளும்தரப்பு மதுவை 'அங்கீகரிக்கப்பட்ட போதைப்பொருள்' எனக் கருதி கலால் வரிகளின் மூலம் ஆண்டு தோறும் பில்லியன் கணக்கில் வருமானம் ஈட்டுகிறது. ஒவ்வொரு ஆண்டும் பணவீக்கம், பொருளாதாரச் சூழல் போன்ற காரணிகளைச் சுட்டிக்காட்டி கலால் வரி அதிகரிக்கப்படுகிறது. ஆனால் இதன் விளைவாக அரசுக்கு பண வருமானம் அதிகரிக்கின்றது தவிர, மக்களின் உடல்நலம், சமூக நலம் ஆகியவை சீரழிகின்றன.

இங்கே கேள்வி எழுகிறது: போதைப்பொருளைத் தடைசெய்து மக்களைக் காப்பதற்கு முயற்சி எடுக்கும் ஆளும்தரப்பு, ஏன் மதுவை சட்டபூர்வமாக வைத்து மக்களை சாவுக்குள் தள்ளுகிறது? இது வருவாயின் பேராசையால் நடத்தப்படும் கொடூரமான கொள்கையல்லவா?

### பாதிப்பு

மதுபான நிறுவனங்கள் புதிய வாடிக்கையாளர்களை ஈர்க்க, இளைஞர்களை, சிறுவர்களைத் தங்களது சந்தைப்படுத்தலின் இலக்காக வைத்துள்ளன. விளம்பரங்கள், விழாக்கள், சுற்றுலாத்துறை என்ற போர்வையில் புதிய மதுபானச் சாலைகள் திறக்கப்படுகின்றன. இது நாளைய தலைமுறையை மதுவுக்கு அடிமையாக்கும் திட்டமாகவே பார்க்கப்படுகிறது.

### பொருளாதாரச் சுமை

மதுவால் ஏற்படும் சுகாதார பாதிப்புகளை குணப்படுத்துவதற்காக அரசு ஒவ்வொரு ஆண்டும் கோடிக்கணக்கான ரூபாய்களை செலவிடுகிறது. இருதய நோய், கல்லீரல் கோளாறுகள், புற்றுநோய் சிகிச்சைகள் அனைத்தும் நாட்டின் சுகாதாரத் துறைக்கு மிகப்பெரிய சுமையாகின்றன. ஆளும்தரப்பு கலால் வரி மூலம் பெறும் பணத்தைவிட சுகாதார செலவுகள் அதிகம் என்பதைக் கவனிக்கவில்லை.

### தவறான முன்னுதாரணம்

மதுவை 'சட்டபூர்வமான போதை' என்று அங்கீகரிப்பது சமூகத்தில் தவறான முன்னுதாரணத்தை உருவாக்குகிறது. அரசு கூடுதலாக வரி வசூலிக்கும்போது, மக்களுக்கு அது மறைமுகமாக அங்கீகாரம் அளித்தது போலவே தோன்றுகிறது. இன்னும் சொல்லப்போனால் சுற்றுலா என்ற பெயரில் மதுப் பாவனை ஊக்குவிக்கப்படுகின்றது. 'தடைசெய்யப்பட்ட போதைப்பொருள் தீங்கு – ஆனால் மதுபானம் அரசால் அங்கீகரிக்கப்பட்டது' என்ற முரண்பாட்டை மக்கள், குறிப்பாக இளைஞர்கள் தெளிவாக உணருகின்றனர்.

### தடுப்பும் கல்வியும்

மதுவை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு கலால் வரி அதிகரிப்பல்ல. மக்கள் நலனை முன்னிறுத்தும் ஆளும்தரப்பு அதற்காக விரைவாகச் சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

- புதிய உரிமங்கள் வழங்குவதை நிறுத்துதல்
- சுற்றுலாத்துறையின் பெயரில் திறக்கப்படும் மதுபானசாலைகளைக் கட்டுப்படுத்துதல்
- இளைஞர்களுக்கான தடுப்பு கல்வி மற்றும் விழிப்புணர்வு திட்டங்களை தீவிரப்படுத்துதல்
- சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையங்களை விரிவுபடுத்துதல்

### வருவாயா? உயிரா?

இலங்கை தினமும் 50 உயிர்களை மதுவுக்கு இழக்கிறது என்பது 'சட்டபூர்வமான போதை' என்பதற்கான மிகக் கடுமையான விலை என்பதைப் புறக்கணிக்க முடியாது. ஆளும்தரப்பு உண்மையிலேயே மக்களின் நலனில் அக்கறை கொண்டிருந்தால், மதுவை பண வருவாய் மூலமாகக் கருதாமல், பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாக்கும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தவேண்டும்.

மதுவை அங்கீகரிக்கப்பட்ட போதையாக வைத்துக் கொண்டு வருவாய் ஈட்டும் அரசின் நிலைப்பாடு, சமூகத்தை அழிவின் பாதைக்கு தள்ளுகிறது. இனி ஒரே கேள்வி – வருவாயா முக்கியம்? மக்களின் உயிரா முக்கியம்?

# உயரதிகாரிகளுடனான தொடர்பை துண்டிக்கிறது இலங்கை மின்சாரசபை ஊழியர் தொழிற்சங்கம்

## போராட்டம் அடுத்த கட்டத்திற்கு நகர்வு

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் இதுவரை கடைப்பிடித்துவரும் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க போராட்டத்தை தீவிரப்படுத்தி திங்கட்கிழமை முதல் உயர் அதிகாரிகளுடன் தொடர்புகளை மேற்கொள்வதில் இருந்து தவிர்ந்திருப்பதாகவும் அந்த அதிகாரிகள் யார் என்பது தொடர்பான தீர்மானத்தை இன்றைய தினத்துக்குள் மேற்கொள்வதாகவும் இலங்கை மின்சாரசபைபொறியியலாளர்சங்கத்தின்நிறைவேற்று குழுஉறுப்பினர்தனுஷ்கபராக்கிரமசிங்கதெரிவித்தார்.

இலங்கைமின்சாரசபை ஊழியர்கள்செப்டெம்பர் 4 முதல் முன்னெடுத்துவரும் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்புச் செய்வதற்கு ஆளும்தரப்பு எடுத்திருக்கும் நடவடிக்கையை முறையாக மேற்கொள்ளவேண்டும் என தெரிவித்து, 24 கோரிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு எமது தொழிற் சங்கங்கள் போராட்டம் மேற்கொண்டு வருகின்றன. தொடக்கமாக நாங்கள் இரண்டு நாள் சுகயீன விடுமுறை அறிவித்து ஊழியர்கள் அனைவரையும் கொழும்புக்கு அழைத்துவந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தோம்.

ஆளும்தரப்பு எமது கோரிக்கைகளுக்கு முறையான தீர்வைப் பெற்றுத்தரத் தவறியதால், அடுத்த கட்ட நடவடிக்கையாக சட்டப்படி வேலை செய்யும்போராட்டத்தைதொடங்கினோம். என்றாலும் ஆளும்தரப்பு எங்களுக்கு இதுவரை முறையான தீர்வொன்றை வழங்கத் தவறி இருக்கிறது. அதனால் இன்றைய தினத்துக்குள் ஆளும்தரப்பு முறையான தீர்வொன்றை வழங்கத் தவறும் பட்சத்தில் எமது போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தி, திங்கட்கிழமை முதல், உயர் அதிகாரிகளுடன் தொடர்புகளை மேற்கொள்வதில் இருந்து தவிர்ந்திருப்பதற்கு தீர்மானிக்க இருக்கிறோம்.

இந்த புதிய முறையை (நொன் கோபரேஷன்) எனும் ஒத்துழையாமைப் போராட்டம் ஒரு தொழிற்சங்க நடவடிக்கையாகும். அதனை அமைச்சு அதிகாரிகள் மற்றும் மறுசீரமைப்பு மேற்கொள்ளும் அதிகாரிகளை இலக்குவைத்து மேற்கொள்ள இருக்கிறோம். என்றாலும் எமது கோரிக்கைகள் தொடர்பில் கலந்துரையாட அழைப்புவிடுத்தால் அதில் கலந்துகொள்ளத் தயாராக இருக்கிறோம்.

அத்துடன் எமது 24 கோரிக்கைகளில் அதிகமானவை இந்த மறுசீரமைப்பு நடவடிக்கையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பானதாகும். குறிப்பாகபுதியநிறுவனங்கள்அமைத்தல், பணிப்பாளர் சபை அமைத்தல், ஊழியர்களை இணைத்துக் கொள்ளல் போன்ற நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ள வேண்டும் என்பதாகும்.

ஆளும்தரப்பு தற்போது முறையாற்ற வகையில் மேற்கொள்ள இருக்கும் இந்த மறுசீரமைப்பு நடவடிக்கை இடம்பெற்றால், பல பிரச்சினைகள் தலைதூக்க இடமிருக்கிறது. அதனாலே மறுசீரமைப்பு நடவடிக்கையை முறையாக மேற்கொள்ளுமாறு நாங்கள் தெரிவித்து வருகிறோம் என்றார்.

## இலங்கை தொடர்பில்

# ஐ.நா. சிறப்பு அறிக்கையாளர் நியமனத்தை உள்ளடக்கிய தீர்மானத்தை நிறைவேற்றுக

## சிறீதரன் எம்.பி. ஜெனிவாவில் வலியுறுத்து

பல சாட்சியாளர்களும், மீறல்களிலிருந்து உயிர் தப்பியவர்களின் குடும்பத்தினரும் வயது முதிர்வடைந்திருப்பதுடன் பலர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் அச்சத்திலும், நம்பிக்கை இழந்தும் வாழ்ந்துவருகின்றனர். எனவே பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான நீதியை நிலைநாட்டும் வகையில் இலங்கை தொடர்பில் ஒரு நாட்டுக்கே உரிய சிறப்பு அறிக்கையாளர் நியமிக்கப்படவேண்டும் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் றிதரன் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரின் பக்க நிகழ்வில் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் கடந்த 8 ஆம் திகதி ஆரம்பமானது. இக்கூட்டத்தொடரின் ஓரங்கமாக நடைபெற்ற பக்க நிகழ்வில் உரையாற்றியபோதே சிறிதரன் மேற்கண்டவாறு வலியுறுத்தினார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:

சமாதானம் நிலவும் தற்காலத்திலும் தமிழர்கள் வாழும்பகுதிகளில்இராணுவத்தினரின்தொடர்ச்சியான ஆக்கிரமிப்பு குறித்த எனது நீண்டகாலக் கவலையை வெளிப்படுத்த விரும்புகிறேன். இத்தகைய பகுதிகளில் வாழும் மக்கள் இன்றும் மனித உரிமைகளை ஒடுக்கக்கூடிய பயங்கரவாத தடைச்சட்டத்தின் கொடுங்கோன்மையான விதிகளுக்குப் பலியாகி வருகின்றனர்.

தற்போது செம்மணியில் கண்டறியப்பட்ட மனிதப்புதைகுழிதொடர்பில்முன்னெடுக்கப்பட்டுவந்த நீதித்துறை விசாரணைக்கான அரச நிதி நிறுத்தப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றிசாட்சியாளர்கள் மீதான ஒடுக்குமுறைகள், ஊடகவியலாளர்கள் கைதுசெய்யப்படல் போன்ற சம்பவங்கள் தொடர்ச்சியாகப் பதிவாகிவருகின்றன.

நான் 2013 ஆம் ஆண்டு முதல் ஒரு சுயாதீனமான சர்வதேச விசாரணைப்பொறிமுறையை நிறுவவேண்டும் எனத் தொடர்ந்து வலியுறுத்திவருகிறேன். குறிப்பாக 2009 ஆம் ஆண்டு மேமாதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்ற மிகமோசமான குற்றங்கள் தொடர்பில் முறையான நிபுணத்துவம் உடையவர்களால் சுயாதீனமானதும், வெளிப்படைத்தன்மைவாய்ந்ததுமானவிசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

எனவே இலங்கை தொடர்பில் ஒரு நாட்டுக்கே உரியசிறப்புஅறிக்கையாளர்நியமிக்கப்படவேண்டும் என்ற விடயம் பேரவையில் நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தில் உள்வாங்கப்படவேண்டும் என வலியுறுத்துகிறேன். அத்தோடு இடைக்கால நீதிப்பொறிமுறையின் ஓரங்கமாக மிகமோசமான மனிதஉரிமைமீறல்களுடன்தொடர்புடையவர்களுக்கு எதிராகக்கடுமையானதடைகள்விதிக்கப்படவேண்டும்.

மேலும் பாதிக்கப்பட்ட தரப்பினர் நீதிக்கான அணுகலை மேற்கொள்வதற்கும், இழப்பீட்டைப் பெறுவதற்கும், விசாரணைகளில் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் பங்கேற்பதற்குமான வாய்ப்பு கிட்டவேண்டும். ஏனெனில் தமிழர் பகுதிகள் முழுமையாக இராணுவமயமாக்கப்பட்டிருப்பதனால், பாதிக்கப்பட்ட தரப்பினர் இலங்கை ஆளும்தரப்பின் மீது அச்சம் கொண்டிருக்கின்றனர்.

துரதிர்ஷ்டவசமாக பல சாட்சியாளர்களும், மீறல்களிலிருந்து உயிர் தப்பியவர்களின் குடும்பத்தினரும் வயது முதிர்வடைந்திருப்பதுடன் பலர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் அச்சத்திலும், நம்பிக்கை இழந்தும் வாழ்ந்துவருகின்றனர். எனவே இவ்விவகாரத்தில் நீதியை நிலைநாட்டுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றார்.

# சிறுமி வன்புணர்வுக் குற்றவாளிக்கு 32 வருட கடூழியச் சிறைத் தண்டனை

(அபு அலா)

திருகோணமலை, சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 16 வயதுச் சிறுமியை வன்புணர்ந்த குற்றவாளிக்கு 32 ஆண்டுகள் கடூழிய சிறை தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளது திருகோணமலை மேல் நீதிமன்றம்.

2021ஆம், 2022ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் வீட்டினுல் அத்துமீறி நுழைந்து 16 வயது சிறுமியை வன்புணர்ந்தார் என்று குற்றவாளி மீது சட்ட மா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நீதிமன்றில் குற்றவாளி மீது ஐந்து குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப்பகர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்தக் குற்றச்சாட்டுகள் அனைத்தும் வழக்கு விசாரணையின்போது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டதை அடுத்து நீதிபதி அப்துல்லாஹ் வியாழக் கிழமை தீர்ப்பளித்தார்.

## 3 வயது ச்சிறுமி மீது வன்கொடுமை கற்பிட்டிப் பகுதியில் கடும் அதிர்ச்சி

(சியாஜ்)

கற்பிட்டி வாழைத்தோட்டம்பகுதியில் மூன்று வயது சிறுமியை பாலியல் துஸ்பிரயோகம் செய்யப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சிறுமி சில நாட்களாக வலியினால் துடித்த நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மருத்துவ சோதனைகளில் அவர் பாலியல் துஸ்பிரயோகம் செய்யப் பட்டமை கண்டறியப்பட்டது.

இதையடுத்து இந்தக் கொடூரத்தைச் செய்தார் என்று கூறப்படும் 35 வயது நபர் ஒருவரை கிராம மக்கள் சுற்றிவளைத்தனர். அவர் தப்பியோட முயற்சித்தார். கடும் போராட்டத்தின் மத்தியில் அவரைப் பிடித்த மக்கள் நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கற்பிட்டிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆனமடுவ பிரதேச செயலக புதிய கட்டடம் திறந்து வைப்பு

(சியாஜ்)

புத்தளம் மாவட்டத்தில் உள்ள ஆனமடுவ நகரில் சுமார் 160 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட புதிய ஆனமடுவ பிரதேச செயலகக் கட்டடம் பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன தலைமையில் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

35 கிராம சேவையாளர் பிரிவுகளையும் 140 கிராமங்களையும் உள்ளடக்கிய ஆனமடுவ பிரதேச செயலகப் பிரிவில் 14,763 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 44,483 மக்கள் வசிக்கின்றனர், இந்தப் புதிய பிரதேச செயலக அலுவலக வளாகம் திறக்கப்பட்டதன் மூலம், இம்மக்களுக்குத் தேவையான சேவைகளை எளிதாக அணுக முடியும் என கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி பிரதி அமைச்சர் ருவான் செனரத், புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கயான் ஜனக மற்றும் முகமது பைசல், ஆனமடுவ பிரதேச சபை உறுப்பினர்கள், பொது நிர்வாக அமைச்சின் கூடுதல் செயலாளர்கள், புத்தளம் மாவட்ட செயலாளர், ஆனமடுவ பிரதேச செயலாளர் மற்றும் பல அரசு அதிகாரிகள் கலந்துகொண்டனர்.







## மதிப்பீட்டுப்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களும் கொல்லப்பட்டனர். இவ்வாறு ஜே.வி.பி.யினரால் சுமார் 6,000 பேர் கொல்லப்பட்டனர். இதனை அடிப்படையாகக் கொண்டுதான் இப்போதும் தேர்தல் காலம் தாழ்த்தப்படுகிறதா? அல்லது உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் 23 இலட்சம் வாக்குகள் இழக்கப்பட்டுள்ள அச்சத்திலா?

கடந்த பொதுத் தேர்தலில் வடக்கு, கிழக்கு மக்களும் இந்த ஆளும்தரப்புக்கே வாக்களித்துள்ளனர். இவர்கள் அனைவரையும் ஏமாற்றி, தொடர்ச்சியாக பொய்களைக் கூறிக் கொண்டு அதிகாரத்தைதக்கவைத்துக்கொள்ள ஆளும்தரப்பு திட்டமிடுகிறதா?

இந்த சதித் திட்டங்களுக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது. எனவே உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு ஆளும்தரப்பிடம் வலியுறுத்துகின்றோம். அதை எதிர்கொள்வதற்கு நாமும் தயாராகவே இருக்கின்றோம். இதேபோன்றுதான் நிறைவேற்றதிகார அரசுத்தலைவர் முறைமை நீக்கப்படும் என்ற வாக்குறுதியையும் வழங்கினர்.

நிறைவேற்றதிகார அரசுத் தலைவர் முறைமை ஒழிக்கப்பட வேண்டுமென்று மட்டுமல்லாமல், ஜே.ஆர்.ஜயவர்த்தனவைக் கொல்வோம் என்றும் அன்று ஜே.வி.பி. சுவரொட்டிகளை அச்சிட்டது. இவ்வாறு நிறைவேற்றதிகார முறைமையைக் கடுமையாக எதிர்த்த ஜே.வி.பி. இன்று எதற்காக அதனைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது?

பாடசாலை மாணவர்களுக்கான உபகரணங்கள், உணவு பொருட்கள் மற்றும் அத்தியாவசிய மருந்துகளுக்கு வட் வரி நீக்கப்படும் என வழங்கப்பட்ட வாக்குறுதியையும் ஆளும்தரப்பு நிறைவேற்றத் தவறியுள்ளது. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டு வேலைத் திட்டத்துக்கு அப்பால் இந்த ஆளும்தரப்பு ஓர் அடியைக்கூட இன்னும் எடுத்து வைக்கவில்லை.

இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ள வெளிநாட்டு நிறுவனங்கள் விரும்பவில்லையென அமெரிக்கா தெரிவித்துள்ளது. இந்த ஆளும்தரப்பின் பொருளாதாரக் கொள்கையே அதற்குக் காரணமாகும். மக்களிடம் அளவுக்கதிகமாக வரியை அறவிட்டு அதன் ஊடாக நாட்டை ஆள்வது மாத்திரமே இந்த ஆளும்தரப்பின் நோக்கமாகவுள்ளது.

அரசுத் தலைவர்யின் பிரதிநிதிகளாக ஆளுநர்களின் சர்வாதிகார ஆட்சியே தற்போது மாகாணசபைகளில் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. இதற்கு தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. எனவே அரசியலமைப்பில் மக்களுக்காக உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமையை அவர்கள் அனுபவிப்பதை உறுதிப்படுத்துமாறு அரசுத் தலைவர் அநுரகுமாரவிடம் வலியுறுத்துகின்றோம்.

புதிய அரசமைப்பொன்று உருவாக்கப்படும் என்று ஆளும்தரப்பு கூறியது. ஜே.ஆர்.ஜயவர்தன 1977இல் ஆட்சியைக் கைப்பற்றி 1978இல் புதிய அரசமைப்பை உருவாக்கினார். இந்த ஆளும்தரப்பும் ஆட்சியமைத்துஓராண்டுநிறைவடைந்துள்ளது. ஆனால்புதியஅரசமைப்புஉருவாக்கத்துக்கான ஒரு அடியைக் கூட இவர்கள் எடுத்து வைக்கவில்லை. பொய்யானவாக்குறுதிகளை வழங்கிவிட்டு அவை தொடர்பில் எந்த பொறுப்பும் இன்றி, உலகம் சுற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இந்த ஆளும்தரப்பின் முதல் ஆண்டு தோல்வியடைந்தஆண்டாகும். ஜனநாயகமும் உறுதிப்படுத்தப்படவில்லை. எனவே மக்கள் தற்போது ஆளும்தரப்பின் மீது கொண்டுள்ள விருப்பு, வெறுப்புக்களை அறிந்து கொள்ள ஆளும்தரப்புக்கு ஒரு மதிப்பீட்டு பரீட்சையாக மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துகின்றோம்.

ஆளும்தரப்பு முதலில் தேர்தலை அறிவிக்க வேண்டும். அதன் பின்னர் எந்த முறைமையில் தேர்தலை நடத்துவது என்பது குறித்து சகல கட்சிகளுடன் பேச்சு நடத்தி இணக்கப்பாடொன்றை எட்ட முடியும் என்றார்.

## மதுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டிருந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

உலகளாவிய ரீதியில் வருடாந்தம் மதுபாவனையால் சுமார் 3 மில்லியன் பேர் உயிரிழக்கின்றனர். பதிவாகும் 10 இறப்புகளில் 8 இறப்புகளுக்குதொற்றாநோய்களேபிரதானக் காரணமாக உள்ளது. தொற்றா நோய்கள் ஏற்படுவதற்கு மதுபாவனையும் முக்கிய காரணியாக உள்ளது. அந்தவகையில் நாட்டில் பதிவாகும் 83 சதவீதமான இறப்புகள் தொற்றா நோய்களால் ஏற்படுகின்றன. மதுபாவனையால் தினமும் சுமார் 50 பேர் அவலச் சாவடைகின்றனர்.

ஒவ்வொருஆண்டும்20ஆயிரம்பேர்உயிரிழப்பதாகவும் தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன. இருதயநோய்மற்றும்புற்றுநோய்ஆகியனசமூகத்தில் அதிகரிப்பதற்கு மதுபாவனையே முதன்மை காரணியாக உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆகையால் நாளாந்தம்இழந்துவரும்வாடிக்கையாளர்களை ஈடுசெய்வதற்காக மதுசார நிறுவனங்கள் சிறுவர்களையும், இளைஞர்களையும் இலக்கு வைத்து பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. நாட்டில் உள்ள 21 சதவீதமானோர் மதுபாவனைக்கு அடிமையாகியுள்ளனர்.

ஆகையால்ஒவ்வொருஆண்டும்பதிவாகும் நாட்டின் பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப கலால் வரியை அதிகரிக்கும்ஒருஅறிவியல்வரிச்சுட்டெண்ணை அறிமுகப்படுத்திஅதைசெயற்படுத்தவேண்டும். தற்காலிக மதுபான சாலைகளுக்கு மற்றும் சுற்றுலாத்துறை என்ற போர்வையில் தொடங்கப்படும் மதுபானசாலைகளுக்கு உரிமங்களை வழங்கும் நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவருவது அவசியம்.

நாட்டிற்கு ஏற்படக்கூடிய செலவுகளையும் , பொதுமக்களின் நல் வாழ்வை கருதியும் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில்கலால்வரியை அதிகரித்தது எதிர்கால சந்ததியினர் மதுபாவகைக்கு ஆளாகும்வீதத்தைகுறைத்துஇதனால்ஏற்படும் சுகாதாரமற்றும்பொருளாதாரபிரச்சினைகளை தடுப்பதற்குஏற்றதிட்டமொன்றை ஆளும்தரப்பு விரைவில்வழங்க வேண்டும் என்றுள்ளது.

# வங்கிய ஊழியர்கள் நேற்றிரவு யாழில் தீப்பந்தப் போராட்டம்

அரச வங்கிகளில் நிலவும் தீர்க்கப்படாத பிரச்சனைகளுக்கு எதிரான தீப்பந்த போராட்டமொன்று யாழ்ப்பாணத்தில் நேற்றையதினம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம்வைத்தியசாலைவீதியில்உள்ள இலங்கை வங்கி வடபிராந்திய காரியாலத்துக்கு முன்பாக குறித்த போராட்டம் இரவு 7 மணியளவில் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

அரசவங்கிகளின் சட்டத்திருத்தங்களினூடாக வங்கி தனியார் மயப்படுத்தலை நோக்கி செல்லவுள்ளதாக போராட்டக்காரர்கள் குற்றஞ்சாட்டினார்.













# வள்ளலாரின் அவதார தின விழா நாளையதினம் பாண்டிருப்பில்

(சகா தேவராஜா)

அருட்பிரகாச வள்ளலான் அவதார தினமான நாளை பாண்டிருப்பு வள்ளலார் வல்லவர் உள்ளொளி நேசிப்பு மைய ஏற்பாட்டில் விசேட ஆன்மீக நிகழ்வுகள் நிலையத்தின் நிறுவுனர் புண்ணிய மலர் அம்மா தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளில் அருட்பெருஞ் ஜோதி கீதம், இசைத்தல். ஜோதிசுடர் ஏற்றுதல், தியானம், யோகாசனம், வள்ளலாரின் போதனைகள் என பல நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து அடியார்கள் பங்கேற்க




உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# மத்திய முகாம் கண்ணகி வித்தியாலயத்திற்கு ஒலிபெருக்கி கருவிகள் வழங்கி வைப்பு.

(ஹாரீஸ்)

உலகசிறுவர்தினத்தைமுன்னிட்டு'உலகை வெல்ல அன்பால் போஷியுங்கள்' எனும் தொனிப்பொருளின் கீழ் மத்திய முகாம் 11ம் வட்டாரம் கண்ணகி வித்தியாலயத்தில் சிறுவர் தின நிகழ்வுகள் நேற்று (03) ஏற்பாடு செய்யப்பட்டிஙரீருந்தன.

இந்நிகழ்வில் சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றதோடு, ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பாராட்டி மதிப்பளிக்கப்பட்டனர்.

பாடசாலயின் நீண்ட நாள் தேவையாக இருந்த ஒலிபெருக்கி கருவிகளை அதிபரின் வேண்டுகோளுக்கு ஏற்ப, நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினரும் நளீர் பவுண்டேஷன் நிறுவனத்தின் நிறுவுனருமானநளீர்இபெற்றுக்கொடுத்தார். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களையும் அவரே வழங்கினார்.

இந்நிகழ்வில் மத்திய முகாம் பொலிஸ் நிலைய சிறுவர் நன்னடத்தை பிரிவின் பொறுப்பதிகாரி தாமர, வலயக் கல்வி உதவி பணிப்பாளர் பரமதயாளன், நாவிதன்வெளி பிரதேச சபை உறுப்பினர் நளீர், சமூகச் செயற்பாட்டாளர் கிருபாகரன், நாவிதன்வெளி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் யோகநாதன் மற்றும் நளீர் பவுண்டேஷன் பணிப்பாளர் ஜஹான் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.







# பொதுக்கூட்டம்

(ஸாகிர்)

சாய்ந்தமருது-மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் இடைக்கால நம்பிக்கையாளர் சபையின் பொதுக்கூட்டம் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலின் கூட்ட அரங்கில் நேற்று இடம்பெற்றது.

இடைக்காலநம்பிக்கையாளர் சபையின்புதியதலைவர்முபாரக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பள்ளிவாசலின் செயலாளர் எஸார் மீராசாஹிப் ஆக்கபூர்வமான கருத்துக்களை முன்வைத்த அனைத்து இடைக்கால நம்பிக்கையாளர் சபையின் உறுப்பினர்களுக்கும், தலைமை தாங்கி வழி நடாத்திய தலைவருக்கும்

உதவிகள் செய்த ஊழியர் குழாமினருக்கும் தனது நன்றியினைத் தெரிவித்துள்ளார்.

## போதைப் பொருள்களுடன்

# ஒரே வாரத்தில் 3,264 பேர் கைது

நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட போதைப்பொருள் வலையமைப்பை கண்டறியும் நடவடிக்கைக்கு அமைய கடந்த ஒருவார காலப்பகுதியில் போதைப்பொருளுடன் 3264 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸ்மா அதிபர் பிரியந்த விரசூரியவின் பணிப்புரைக்கமைய ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி முதல் நாடளாவிய ரீதியில் பொலிஸாரால் குற்றசெயல்கள் மற்றும் போதைப்பொருள் தடுப்பு விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி நடவடிக்கையுடன் இணைந்ததாக செப்டம்பர் 26 முதல் ஒக்டோபர் 2 வரை முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் வலையமைப்பை கண்டறிதல் மற்றும் சந்தேகநபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைக்கு அமைய 3,264 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைய நாடு முழுவதும் 3,271 சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதன்போது ஹெரோயினுடன் 1045 சந்தேகநபர்களும், ஐஸ் போதைப்பொருளுடன் 1,149 சந்தேக நபர்களும், ஹேஸ் போதைப்பொருளுடன் 35 சந்தேகநபர்கள் மற்றும் கஞ்சா போதைப்பொருளுடன்910சந்தேகநபர்களும் கைதாகியுள்ளனர்.

மேலும் கஞ்சா செடி, போதை மாத்திரை, சட்டவிரோதசிகரெட்டுக்கள் ஆகியவற்றுடன் 125 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

# திலீபனின் நினைவேந்தலில் அரசியல் செய்யவேண்டாம்

## தமிழ் அரசுக் கட்சித் தலைவர் உருக்கம்

தியாக தீபம் திலீபனின் தியாகத்தில் அரசியல் செய்ய வேண்டாம் என கட்சிகளிடம் அமைப்புக்களிடம் கோரிக்கை முன்வைத்த இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் பொருத்தமான அரசியல் கலப்பற்ற நினைவேந்தல் கட்டமைப்பை உருவாக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுச் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேலும் தெரிவிக்கையில், அண்மைக்காலமாக தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் தொடர்பில் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டு வருகிறது.

இது தொடர்பில் தியாக தீபம் திலீபனுக்கு உதவியாகவும் அவருக்கு பின்னர் யாழ்ப்பாணம் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளராக இருந்த ராஜன் உள்ளிட்ட மூத்த போராளிகள் பலரும் என்னை தொடர்பு கொண்டு இது தொடர்பில் அரசியல் கலப்பற்ற ஒரு கட்டமைப்பை உருவாக்குமாறு கேட்டுகொண்டனர்.

1988ம் ஆண்டு என்னுடைய செலவிலேயே தியாக தீபம் திலீபனுக்கான தூபி 'தியாக தீப தூபி' என்ற பெயரில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. அந்த தூபி எழு வருடங்களுக்கு பின்னர் 1995ம் ஆண்டு உடைக்கப்பட்டது.

அதன் காரணமாக நான் சுடப்பட்டு வேலை இழந்து இந்திய அமைதிப்படை பாதுகாப்பு கைது என தடுக்கப்பட்டு இந்தியாவுக்கு தப்பியோட வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்போது தீபங்களுக்கு முன்பாக தலை குனிந்து நிற்பவர்கள் தம்மை தியாகிகளாக நினைக்கின்றனர். இதில் யார் யார் இராணுவ புலனாய்வுடன் தொடர்பு கொண்டவர்கள் என்பது எனக்கு தெரியும்.

திலீபனுடன் தொடர்பை கொண்டவன். தூபியைதிரும்பநிறுவியவன்என்றஅடிப்படையில் எனக்கு அதை பற்றி தெரியும்.



போர் முடிந்த பிறகு முதன்முறையாக 2016ம் ஆண்டு தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தை துப்பரவாக்கி நினைவேந்தலை செய்யுமாறுஜனநாயகபோராளிகள்கட்சியைநான்வலியுறுத்தினேன். அதன்படி அது நடந்தது. 2017ம் ஆண்டில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸிம் இணைந்து கொண்டனர்.

2018 இல் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நினைவிடத்தில் கொட்டில் போட்டு ஆதிக்கம் செலுத்தியபோது மாவை சேனாதிராஜாவை அழைத்து நான் சென்றபோது நாம் ஏளனமாக நடத்தப்பட்டோம்.

தற்போது உள்ளவர்கள் வரலாற்றை திரிபு படுத்த கூடாது. திலீபன், எல்லாருக்கும் பொதுவானவன். அவன் கௌரவிக்கப்பட வேண்டியவன். மதிப்பளிக்கப்பட வேண்டியவன். போட்டி பொறாமையால் நினைவேந்தலை கொச்சைப்படுத்த கூடாது.

திலீபனின் தியாகத்தில் அரசியல் செய்ய வேண்டாம். பொருத்தமான அரசியல் கலப்பற்ற கட்டமைப்பை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு நினைவேந்தலிலும் குழப்பம் ஏற்படுத்தப்படுகிறது. ஐந்து அல்லது ஏழு பேரை கொண்ட

நினைவேந்தலுக்கான கட்டமைப்பை உருவாக்கி தியாக தீபம் திலீபனின் நினைவேந்தலை செய்ய வேண்டும்.

இதற்கு மக்கள் ஏகோபித்த ஆதரவை வழங்க வேண்டும் - என்றார்.


வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்
மருதம் பசுமை நகர்
Marutham Green City
நல்லூர் ஆலயம் 9km
கச்சேரி 8km
யாழ் பேருந்து நிலையம் 11km
யாழ் புகையிரதநிலையம் 10km
வடக்கு மாகாணசபை 9km
உள்ளக வசதிகள்
நூலகம்
நீச்சல் தடாகம்
உணவகம்
சிறுவர் பூங்கா
விளையாட்டுத்திடல்
மீன்பிடி குளம்
A – 2 பரப்பு மேட்டுக்காணியுடன் 2 பரப்பு வயல்க்காணி
B – 2 பரப்பு மேட்டுக்காணியும் 2 பரப்பு வயல்க்காணியும் (தனிதனியாக)
C – 2 பரப்பு மேட்டுக்காணி பிரதான வீதியுடன்
0777 43 55 57


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24×7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane, Jaffna


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
KNOWLEDGE IS POWER
January 25 FREE
February 5
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை


Study
MBBS
in China
SLMC APPROVED
Dalian Medical University
YOUR PATH TO WORLD CLASS MBBS
JDR HEALTH CARE PVT(LTD)
SEPTEMBER 2025
ADMISSION
OPEN
CONTACT US FOR ADMISSION
0701348384







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 04.10.2025இல் வெளியிடப்பெற்றது